FWC

# யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

## Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன் - 2016

## Term Examination, June - 2016

| தரம் :- 13 (2016) | அரசியல் விஞ்ஞானம் – I | இரண்டு மணித்தியாலங்கள் |
| --- | --- | --- |

- 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான விடையைத் தெரிந்தெடுத்து, தரப்பட்ட அறிவுறுத்தல் களுக்கமைய விடைத்தாளில் அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தில் புள்ளடி (X) இடுக.

- **01 தொடக்கம் 10 வரையிலான வினாக்களிலுள்ள ஐந்து கூற்றுக்களுள் தலைப்புக்குப் பொருத்தமற்ற கூற்றினைத் தெரிவு செய்க.**

01) அரசியல் விஞ்ஞானம் என்பது
(1) சமூக விஞ்ஞானங்களில் ஒன்றாகக் காணப்படுகிறது.
(2) இயற்கை விஞ்ஞானத்தின் சில இயல்புகளைக் கொண்டுள்ளது.
(3) காலத்துக்குக் காலம் இதன் பாடப்பரப்பு மாற்றமடையக்கூடியது.
(4) அதிகாரம் மற்றும் அதிகாரப் போராட்டம் பற்றி ஆராய்கிறது.
(5) சமூகவியல் உறவுகளை விஞ்ஞான ரீதியில் மட்டும் ஆய்வு செய்கிறது.

02) அரசியல் விஞ்ஞானத்தினைக் கற்பதற்கான நோக்கம்
(1) ஜனநாயக பெறுமானங்களை அர்ப்பணம் செய்யும் குடிமக்களை உருவாக்குவதற்கு ஆகும்.
(2) மக்களிடையே சிவில் புரிந்துணர்வினை பரவலாக்குதல்
(3) தேசிய சர்வதேச அரசியலை அறிந்து கொள்வதற்கு ஆகும்.
(4) அரசியல் போராட்டத்தினை விளங்கிக் கொள்வதற்காகும்.
(5) சிறந்த அரசியல்வாதியாக உருவாவதற்கு ஆகும்.

03) அரசியல் என்பது
(1) அரசாங்கத்தினதும் அரசினது செயற்பாடுகளோடும் இணைந்த செயன்முறை பற்றிய கலையாகும்.
(2) எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை எவ்வழி முறையினூடாகவேனும் அடையும் அதிகாரப் போராட்டமாகும்.
(3) பொதுவளங்களின் பயன்பாடு மற்றும் பங்கீட்டோடு தொடர்பான செயன்முறையாகும்.
(4) சமரசம் மற்றும் பேச்சுவார்த்தையினூடாக மோதல்களைத் தீர்த்துக் கொள்ளும் ஒருவழி முறையாகும்.
(5) நல்லவை, தீயவைகளுக்கிடையிலான வேறுபாடுகளைக் கற்றலோடு இணைந்த பொதுச் செயற்பாடாகும்.

04) அரசாங்கத்தின் உள்ளகப் பணிகள்
(1) சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்துதல்
(2) சுற்றாடல் முகாமைத்துவத்தை ஏற்படுத்துதல்
(3) கல்வியும் அடையாளப்படுத்தப்பட்ட பணிகள்
(4) சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்தல்
(5) நாட்டின் எல்லைகளைப் பாதுகாத்தல்

05) அரசின் தோற்றமானது
(1) தெய்வீக உரிமை வாதத்தின்படி கடவுளின் படைப்பாகும்.
(2) சமூக ஒப்பந்த வாதத்தின்படி சமூக ஒப்பந்தத்தின் விளைவாகும்.
(3) தாராளவாதத்தின்படி பொதுநன்மைக்காக மக்களால் தோற்றுவிக்கப்பட்டதாகும்.
(4) மாக்சீய வாதத்தின்படி தனியார் சொத்துடைமையின் தோற்றத்தின் விளைவினதாகும்.
(5) பாசிச வாதத்தின்படி நீண்ட படிமுறை வளர்ச்சியின் விளைவாகும்.

06) முறைமைப் பகுப்பாய்வு அணுகுமுறை
(1) எதிர்கால அரசியல் நிலைமைகளை முன் வைக்கிறது.
(2) இயற்கை விஞ்ஞானத்திலிருந்து சமூக விஞ்ஞானத்திற்குக் கொண்டுவரப்பட்டது.
(3) கட்டமைப்புப் பணிப்பகுப்பாய்வு அணுகுமுறை எனவும் அழைக்கப்படுகிறது.
(4) உள்ளீட்டு, வெளியீட்டு பகுப்பாய்வு முறைகளை உள்ளடக்கியுள்ளது.
(5) அரசியல் நிறுவனங்களை அமைப்பு ரீதியாக ஆராய்கிறது.

07) தேசிய அரசின் இருப்பினை பலப்படுத்திய காரணிகள்
(1) அரசின் தோற்றம் பற்றிய தெய்வீக உரிமைக் கோட்பாடு
(2) முதலாளித்துவத்தின் எழுச்சி
(3) புரட்டஸ்தாந்து மாதச் சீர்திருத்த இயக்கத்தின் செயற்பாடுகள்
(4) மாக்கியவல்லி, கொப்ஸ் போன்றோரின் அரசியல் கோட்பாடுகள்
(5) 1648 இன் வெஸ்பாலியா சமாதான உடன்படிக்கை

08) மந்திரிசபை அரசாங்கமுறை என்பது
(1) அரசியல் கட்சி அரசாங்கம் என்றும் அழைக்கப்படுகிறது.
(2) பன்முகச் சமூகமுறைக்கு அதிகம் பொருந்தும்
(3) நாமநிர்வாகம், உண்மை நிர்வாகம் ஆகிய இரண்டினைக் கொண்டதாகும்.
(4) கட்சிகளின் அடிப்படையில் செயற்படுவதனால் அரசியல் ரீதியாக உறுதியற்றதாகும்.
(5) ஜனநாயகத் தன்மை வாய்ந்ததும் பொறுப்புடைமை மிக்கதுமான செயற்றிறன் குன்றியதாகும்.

09) ஜனாதிபதி அரசாங்க முறை என்பது
(1) அனைத்தாண்மை அரசாங்கமுறை என்று கருதப்படுகிறது.
(2) பலகட்சி முறை நிலவும் நாடுகளுக்குப் பொருந்தும்
(3) பலமான நிறைவேற்றுத்துறையின் காரணமாக அரசியல் ரீதியாக உறுதிமிக்கதாகும்.
(4) ஜனாதிபதி என்றழைக்கப்படும் தனித்த நிர்வாகம் என்ற பண்பினையுடையதாகும்.
(5) சனநாயகத் தன்மை குறைந்ததாயினும் செயற்றிறன் மிக்கதாகும்.

10) அரசாங்கம் தனது அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் வழிமுறைகளாவன,
(1) தண்டனைகளை வழங்குவதன் மூலமாக
(2) சன்மானம் வழங்குதல் மற்றும் அச்சுறுத்தல் மூலமாக
(3) சமயம் மற்றும் ஒழுக்க நம்பிக்கைகள் மூலமாக
(4) தனது முகவர்கள் ஊடாக அதிகாரங்களைப் பிரயோகிப்பதன் மூலமாக
(5) அரசாங்கத்தின் அதிகாரம் சட்டமுறையானது என மக்களை நம்பச் செய்வதன் மூலமாக

11) அரசியற் கட்சிகளின் பணிகளுள் அடங்காத விடயத்தை இனங்காண்க.
(1) அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகப் போராடுதல்
(2) வாக்காளர்களுக்கு அரசியல் அறிவூட்டுதல்
(3) கொள்கை உருவாக்கத்தில் நேரடியாகப் பங்கு கொள்ளுதல்
(4) சமூக பலத்தை அதிகார பலமாக மாற்றிக் கொள்ளுதல்
(5) கருத்தொற்றுமையான சிதறியுள்ள மக்கள் கருத்துக்களை ஒன்று திரட்டுதல்

12) அமுக்கக் குழுக்கள் தொடர்பான சரியான கூற்றைத் தெரிவு செய்க.
(1) அதிகாரத்தைப் பெறுவதனை தனது முக்கியமாகக் கொண்டு செயற்படுதல்
(2) கொள்கை உருவாக்கத்தில் அரசாங்கத்துக்கு அழுத்தத்தைக் கொடுப்பதில் பங்களிப்புச் செய்வதில்லை.
(3) ஒத்த அரசியற் கருத்துக்களைக் கொண்டவர்களை ஒரே அணியில் சேர்க்கத் தூண்டுகின்றன.
(4) பொதுச் சமூக நலன்களை ஒன்று திரட்டுவது இதன் அடிப்படை நோக்கமாகும்.
(5) இவற்றின் செயற்பாடானது சனநாயக அரசியல் வளர்ச்சியின் ஒரு அளவு கோலாகும்.

13) ஒற்றையாட்சி முறைமையின் பிரதான பண்புகளுள் அடங்காதது
(1) தனித்த அரசியலமைப்பை மாற்றுவதில் சிக்கலில்லை.
(2) மத்திய அரசின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்கள் செயற்படுதல்
(3) இரட்டைக் குடியுரிமை காணப்படுதல்.
(4) ஒரு தனி மத்திய அரசாங்கத்தில் இறைமை அதிகாரம் செறிந்திருத்தல்
(5) ஒற்றை நிர்வாக மற்றும் நீதி முறைமை நிலவுதல்

14) சமஷ்டி அரசாங்க முறை பற்றிய தவறான கூற்று எது?
(1) அதிகாரப் பங்கீடு காணப்படுதல்.
(2) எழுதப்பட்ட நெகிழா யாப்பு நிலவுதல்.
(3) அரசியலமைப்பின் பாதுகாவலனாகச் செயற்படும் சுதந்திரமான நீதித்துறை காணப்படுதல்.
(4) பலவீனமான மத்திய அரசாங்கத்தின் கீழ் பலமான சமஷ்டி அலகுகள் செயற்படுதல்.
(5) மாநில அரசாங்கங்கள் பாரபட்சமாக நடாத்தப்படாது இருத்தல்.

15) பொது மக்களை அரசாங்கத்துடன் தொடர்புபடுத்தும் வழிமுறைகளுள் அடங்காதது
(1) அரசசார்பற்ற நிறுவனங்கள்
(2) அமுக்கக் குழுக்கள்
(3) அரசியல் கட்சிகள்
(4) பொதுசன அபிப்பிராயம்
(5) நீதியான தேர்தல்கள்

➢ **16 தொடக்கம் 25 வரையிலான வினாக்களுக்கான சரியாக சேர்மானத்தினை தெரிவு செய்க.**

16) அதிகார வேறாக்கம் என்பது
A - 1789 ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பு உருவாக்கத்தின் போது பயன்படுத்தப்பட்ட ஒரு முக்கியமான கோட்பாடாகும்.
B - அரசாங்கத்தின் மூன்று பிரதான பணிகளும் ஒன்றிலிருந்து மற்றவை பிரிந்திருக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தும் கோட்பாடாகும்.
C - ஒருவரின் கையில் அதிகாரம் குவிந்திருப்பின் கொடுங்கோன்மைக்கு வழிவகுக்கும்.
D - ஜனநாயக ஆட்சிக்கும் மக்களின் சுதந்திரத்தின் பாதுகாப்புக்கும் இன்றியமையாத மூலக் கொள்கையாகக் கருதப்படுகிறது.
E - சமஷ்டி அரசாங்கங்களில் மத்திக்கும் சமஷ்டி அலகுகளுக்குமிடையில் அதிகாரங்களை பங்கீடு செய்யப் பயன்படுத்தும் ஒரு கோட்பாடாகும்.

(1) ABEC (2) ADCE (3) BACD (4) BCDE (5) ABDE

17) அரசியலமைப்பு என்பது
A - ஓர் அரசியல் முறைமையிலுள்ள பிரசைகளின் சமூக நடத்தையோடு தொடர்பான விதிகளையும் ஒழுங்கு விதிகளையும் குறிக்கும் ஓர் ஆவணமாகும்.
B - எழுதப்பட்ட, எழுதப்படாத சமஷ்டி - ஒற்றையாட்சி நெகிழும், நெகிழாத யாப்புக்கள் எனப் பாகுபடுத்தப்படுகிறது.
C - மக்களின் ஜனநாயக வாழ்க்கை முறைமையை உறுதிப்படுத்தும் நல்லாட்சிக்குரிய ஆவணமாகும்.
D - மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஒரு சிறந்த கருவியாகக் காணப்படுகிறது.
E - ஜனநாயக ரீதியானதும் சட்டமுறையானதுமான ஆட்சிக்கு இன்றியமையாதது எனக் கருதப்படுகிறது.

(1) BCAD (2) BADE (3) ACDE (4) ABCE (5) CBDE

18) அரசியல் கலாசாரம் என்பது

A - அமெரிக்க அரசறிவியலாளர்களால் இரண்டாம் உலகப் போருக்குப் பிற்பட்ட காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

B - இன்று உலக நாடுகளில் நிகழும் பல்வேறு சம்பவங்களைக் குறிக்கப் பயன்படுகின்றது.

C - அரசியல் பகுப்பாய்வினில் தற்காலத்தில் பயன்படுத்தப்படுகின்ற ஒரு முக்கிய கருவியாகும்.

D - வேறுபட்ட அரசியல் முறைமைகளை ஒப்பிடுவதற்கு பயன்படுத்தக்கூடிய ஓர் எண்ணக்கருவாகும்.

E - அரசியல் முறைமையின் மீது மக்கள் வெளியிடும் நம்பிக்கைகள், மனப்பாங்கு, விழுமியங்கள் என்பவற்றைக் கொண்டிருக்கும்.

(1) CADE (2) ABCE (3) ABDE (4) BCDE (5) ABCD

19) மனித உரிமைகளாவன

A - மனிதப் பிறவிகளாக இருப்பதனால் மனிதர்களுக்கு உரித்தாகும் உரிமைகளாகும்.

B - சகல மனிதப் பிறவிகளினதும் மதிப்புக்கும் இருப்புக்கும் அத்தியாவசியமானவையாகும்.

C - சகல மனிதருக்கும் உரித்தாகுவதனால் அவை அனைத்துலக தன்மை வாய்ந்தனவாகும்.

D - உலக நாடுகளின் கவனத்துக்கு உட்பட்டவையாகும்.

E - சட்டத்தினால் கோரப்படக்கூடிய உரிமைகள் மட்டுமாகும்.

(1) BCDE (2) BACD (3) ABDE (4) ACDE (5) ABCE

20) சிவில் சமூகம் என்பது

A - சனநாயக ஆட்சியின் ஆரோக்கியமான செயற்பாட்டிற்கு அத்தியாவசியமான ஒரு காரணி எனக் கருதப்படுகிறது.

B - அரசாங்க அதிகாரத்தை கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தும் ஒரு பிரதான கருவி என ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

C - மக்களை அரசியல் சமூக ரீதியாகப் பலப்படுத்துவதற்காகப் பயன்படுத்தும் ஒரு கருவியாக் கருதப்படுகிறது.

D - அரச கட்டுப்பாட்டிலிருந்து முழுமையாக விடுபட்ட ஒரு சமூகமாகும்.

E - அரசுக்கும் குடும்பத்துக்கும் வெளிவாரியாக ஒழுங்கமைந்த அமைப்புக்களைக் கொண்ட சமூகமாகும்.

(1) ABDE (2) ACDE (3) BACE (4) BCDE (5) BACD

21) விகிதாசார பிரதிநிதித்துவத் தேர்தல் என்பது

A - ஒருமைத் தன்மை கொண்ட சமூகங்களுக்கே அதிகம் பொருந்துகின்றது.

B - ஜனநாயகத் தன்மை வாய்ந்த தேர்தலாகும்.

C - பிரதான கட்சிகளின் ஆதிக்கம் குறைகிறது.

D - பலகட்சிமுறை தோன்றுவதில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

E - சிறுபான்மை இனங்களுக்கு நன்மை அளிக்கிறது.

(1) BCDE (2) ABCD (3) ABDE (4) ACDE (5) ABCE

22) தாராள ஜனநாயக அரசாங்கத்தின் சில பிரதான பண்புகளாவன

A - சிவில் சுதந்திரம், மனித உரிமைகள் என்பன உறுதிப்படுத்தப்பட்டிருக்கும்.

B - நீதித்துறை சுதந்திரமும் சட்டவாட்சியும் நிலை நாட்டப்படும்.

C - நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தும் அரசினால் முழுமையாகக் கட்டுப்படுத்தப் பட்டிருக்கும்.

D - காலத்திற்குக் காலம் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்கள் நடைபெறும்.

E - யாப்புறு அரசாங்கமாக ஒழுங்கமைந்திருக்கும்.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABCE (5) ABDE

23) நல்லாட்சி ஒன்றின் மூலங்களாக அமைவன

A - வெளிப்படைத் தன்மை

B - பொறுப்பு

C - ஆதிக்கவாதம்

D - சமூக மதிப்பீடு

E - சட்டத்தின் ஆட்சி

(1) DEAB (2) BCDE (3) EABC (4) DCAE (5) ABCD

24) ஒப்பங்கோடல் என்பது

A - நேரடி ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்த உதவுகிறது.

B - அரசாங்க சட்டங்களின் சட்டமுறையான தன்மையை அதிகரிக்கச் செய்கிறது.

C - சட்டவாக்கப் பணியின் சுமையைக் குறைப்பதற்கு இதனைப் பயன்படுத்தலாம் என நம்பப்படுகிறது.

D - வளர்ச்சியடைந்த சனநாயக நாடுகளில் அதிகமாக பின்பற்றப்படுகின்ற முறையாகும்.

E - பொதுத் தேர்தலுக்கான ஒரு பிரதியீடாக இதனைப் பயன்படுத்த முடியும் எனக் கருதப்படுகிறது.

(1) BACD (2) DEAB (3) BCDE (4) EABC (5) DCAE

25) அரச கொள்கை உருவாக்கம்

A - நாட்டின் முழு அபிவிருத்தியினை இலக்காகக் கொண்டது.

B - நாட்டின் அரசியல் கட்சிகள், அமுக்கக் குழுக்கள் போன்றவற்றின் கொள்கைகளை உள்ளடக்கியது.

C - அரசின் சட்ட ரீதியான மற்றும் அதிகார அடிப்படையைக் காட்டுகிறது.

D - பொதுநலனை இலக்காகக் கொண்டது.

E - அரசின் அடிப்படைக் கொள்கைத் தத்துவங்களை வெளிக்காட்டுகிறது.

(1) ABEC (2) ADCE (3) BACD (4) BCDE (5) ABDE

➢ **26 தொடக்கம் 30 வரையிலான வினாக்களில் உள்ள பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க.**

26) சுவிஸ்சர்லாந்தின் சமஷ்டிச் சட்டத்துறையானது

(1) ஒரு மன்ற முறையினதாகும்.

(2) மக்கள் அதிகாரத்திற்குட்பட்டு அரச அதிகாரத்தைப் பிரயோகிக்கும் மீயுயர் கருவியாகும்.

(3) கட்சி அரசியலுக்கு முக்கியத்துவம் வழங்குவதில்லை.

(4) சமஷ்டி மன்று என அழைக்கப்படுகிறது.

(5) சகல சமஷ்டி அதிகாரத் தாபனங்களையும் மேற்பார்வை செய்யும் அதிகாரங்களைப் பெற்றுள்ளது.

27) பிரித்தானிய மகாராணி

(1) சட்ட மூலங்களுக்கு இறுதியாக ஒப்பமிடும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார்.

(2) ஐந்து வருடங்களுக்கு பதவி வகிக்கிறார்.

(3) வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைப் பிரயோகிக்கிறார்.

(4) நிர்வாக ரீதியான ஆலோசனைகளை வழங்குகிறார்.

(5) பழமை மற்றும் மரபுகளின் சின்னமாக விளங்குகிறார்.

28) அமெரிக்க செனற்சபை

(1) நிதிமசோதாவினை திருத்தும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

(2) மக்கள் பிரதிநிதிகள் சபையுடன் ஒத்த அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

(3) உயர் பதவிகளுக்கான நியமனங்களை மேற்கொள்வதற்கான அதிகாரங்களைப் பெற்றுள்ளது.

(4) சமஷ்டி நீதிமன்ற நீதியரசர்கள் தொடர்பாக குற்ற விசாரணை மேற்கொள்ள இயலாது.

(5) மாநிலங்கள் சார்பான சபையாகும்.

29) இந்தியப் பாராளுமன்றம்

(1) இருமன்ற முறையினதாகும்.

(2) லோகசபை இதன் முதலாம் மன்றம் என அழைக்கப்படுகிறது.

(3) மாநிலங்கள் அவைக்கு உப சனாதிபதி தலைமை தாங்குகிறார்.

(4) குழுநிலை விவாதங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

(5) சட்ட மூலங்களுக்கு சபாநாயகர் இறுதியாகக் கையொப்பமிடுகிறார்.

30) பிரான்ஸ் ஜனாதிபதி

(1) நீதித்துறைச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் அதிகாரமுடையவர்.

(2) தேசியப் பேரவையை கலைக்கும் அதிகாரமுடையவர்.

(3) அரசாங்க சேவையைக் கட்டுப்படுத்துகிறார்.

(4) பிரதமரின் ஆலோசனைப்படியே அமைச்சர்களை தெரிவு செய்கிறார்.

(5) பிரதமரைத் தமது சுய விருப்பத்தின்படி தெரிவு செய்கிறார்.

➢ **31 தொடக்கம் 35 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிலும் காணப்படும் பிழையான கூற்றுக்களின் தொகுதியை தெரிவு செய்க.**

31) இலங்கையில் சட்டசபைக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு முதன் முதலாக வயது வந்தோருக்கான வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டது.

A - 1833 கோல்புறூக் - கமரன் சீர்திருத்தத்தின் மூலமாகும்.

B - 1910 குறு - மக்கலம் சீர்திருத்தத்தின் மூலமாகும்.

C - 1924 மனிங் - டிவன்ஷயர் சீர்திருத்தத்தின் மூலமாகும்.

D - 1931 டொனமூர் சீர்திருத்தத்தின் மூலமாகும்.

E - 1947 சோல்பரி சீர்திருத்தத்தின் மூலமாகும்.

(1) ABCD (2) ABCE (3) BCDE (4) ABDE (5) ACDE

32) இலங்கைத் தேசிய காங்கிரஸ்

A - இந்தியாவில் செயற்பட்ட இந்திய தேசிய காங்கிரசைப் போன்று காணப்பட்டது.

B - கீழ்மட்டத்திலுள்ள மக்களையும் பங்கேற்க அனுமதி அளித்தது.

C - பூரண சுதந்திரத்தைப் பெறுவதே நோக்கமாக இருந்தது.

D - சகல இனத்தவரையும் உள்ளடக்கிய உயர்குழாம் வகுப்பினரால் தலைமைதாங்கப்பட்ட பேரம் பேசும் அமைப்பாக இருந்தது.

E - பிளவுறாத ஒற்றுமையுடன் செயற்பட்ட இயக்கமாக இருந்தது.

(1) ABEC (2) ADCE (3) BACD (4) BCDE (5) ABDE

33) சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு சோல்பரி யாப்பில் வழங்கப்பட்டிருந்த விஷேட காப்பீடுகளாவன

A - யாப்பின் 29(2) ஆம் உறுப்புரை

B - அடிப்படை உரிமைகள் பற்றிய ஒரு அத்தியாயம்

C - அரச கொள்கைகளைக் கொண்ட தத்துவம்

D - பொதுசன அபிப்பிராய ஏற்பாடுகள்

E - பிரதமருக்கு வழங்கப்பட்டிருந்த விஷேட அதிகாரங்கள்

(1) ABDE (2) ABCE (3) ACDE (4) BCDE (5) ABCD

34) 1972 முதலாம் குடியரசு யாப்பின் பிரதான பண்புகளாவன

A - மீயுயர் கருவியாக தேசிய அரசுப் பேரவையை அறிமுகப்படுத்தியது.

B - வெஸ்ட்மினிஸ்டர் மாதிரியைத் தொடர்ந்தும் செயற்படுத்தியது.

C - நாமநிர்வாகத்தை இல்லாதொழித்தது.

D - பொதுச்சேவை, நீதிச்சேவை ஆணைக்குழுக்களை செயற்பட தொடர்ந்தும் அனுமதி அளிக்கப்பட்டது.

E - சனாதிபதி தலைமையிலான சட்டமன்றை உருவாக்கியது.

(1) ABDE (2) ACDE (3) ABCE (4) BCDE (5) ABCD

35) 1978 யாப்பின் கீழுள்ள சட்டத்துறை

A - சில யாப்புறு நிபந்தனைகளுக்குட்பட்டு ஜனாதிபதியால் கலைக்கப்படும்.

B - மக்களால் தெரிவு செய்யப்படும் 225 உறுப்பினர்களைக் கொண்டதாகும்.

C - ஈரவையைக் கொண்ட பாராளுமன்றம் என அழைக்கப்படுகிறது.

D - பிரதம மந்திரியின் செல்வாக்குக்கு உட்பட்டது.

E - நீதித்துறை சார்ந்த அதிகாரங்களை செயற்படுத்துகிறது.

(1) BCDE (2) ABDE (3) ACDE (4) ABCE (5) ABCD

- **36 தொடக்கம் 40 வரையிலான வினாக்களிலுள்ள ஐந்து கூற்றுக்களுள் நான்கு சரியானவையாகும். சரியான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவு செய்க.**

36) லங்கா சமசமாசக்கட்சி

A - 1935 இல் தாபிக்கப்பட்டது.

B - இலங்கையில் தாபிக்கப்பட்ட முதலாவது இடதுசாரிக் கட்சியாகும்.

C - மாக்சீயத்தைத் தழுவிய, மேற்கத்தேய கல்வியைப் பெற்ற, இளம் தீவிரவாதக் குழுவினால் ஸ்தாபிக்கப்பட்டது.

D - இலங்கையில் ஒரு சமதர்ம அரசாங்கத்தை உருவாக்கும் நோக்கினைக் கொண்டிருந்தது.

E - ஆரம்பத்தில் இது பிரமுகர்களினால் உருவாக்கப்பட்ட கட்சியாக ஒழுங்கமைக்கப்பட்டது.

(1) BCDE (2) ABDE (3) ACDE (4) ABCE (5) BACD

37) டொனமூர் அரசாங்கம்

A - பொறுப்பரசாங்க முறையை இலங்கைக்கு கோரி நிற்பதற்கு இலங்கையரைத் தயார்படுத்தியது.

B - சுதேசியத் தலைவர்களுக்கு நிர்வாகம் பற்றிய பயிற்சியை வழங்கியது.

C - சனநாயக ஆட்சிக்கான வழிவகைகளை ஏற்படுத்தியது.

D - கூட்டுப் பொறுப்புடைய நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு காரணமானது.

E - இலங்கையருக்கு அரைகுறையான பொறுப்பாட்சியை வழங்கியது.

(1) ACDE (2) BACE (3) ABDE (4) BCDE (5) ABCD

38) சோல்பரி அரசியலமைப்பின் கீழமைந்த மந்திரிசபை

A - பிரதம மந்திரியின் தலைமையில் செயற்பட்டது.

B - பாராளுமன்றத்துக்கு கூட்டாகப் பொறுப்புக் கூறவேண்டியிருந்தது.

C - உண்மையான நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டிருந்தது.

D - ஒரே கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

E - மேலவை உறுப்பினர்கள் சிலரையும் உள்ளடக்கி இருந்தது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

39) 1972ம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ்

A - நாட்டின் உத்தியோகப்பூர்வப் பெயரான இலங்கை ஸ்ரீலங்கா என்று மாற்றப்பட்டது.

B - நாட்டின் அடிப்படைச் சட்டமாக அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

C - நிறைவேற்றுத் துறையின் தலைவராக குடியரசின் சனாதிபதி விளங்கினார்.

D - இலங்கைக் குடியரசின் இறைமை மக்களிடம் உள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

E - இலங்கை சுதந்திரமும் இறைமையும் பொருந்திய ஒரு குடியரசாக ஆக்கப்பட்டது.

(1) BCDE (2) BADE (3) ABCD (4) ACDE (5) ABCE

40) 1978ம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட சில புதிய அரசியல் நிறுவனங்கள்

A - ஒப்பங்கோடல்

B - ஓம்பூட்ஸ்மன்

C - விகிதசம பிரதிநிதித்துவ தேர்தல் முறைமை

D - மாகாணசபை முறைமை

E - பிரதமர் தலைமையிலான அமைச்சரவை

(1) BCDE (2) ABDE (3) ACDE (4) ABCE (5) BACD

➢ **41 தொடக்கம் 46 வரையிலான வினாக்களில் உள்ள ஐந்து கூற்றுக்களுள் நான்கு பிழையானவை ஆகும். பிழையான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவு செய்க.**

41) இலங்கைக்கட்சி முறையின் பிரதான பண்புகளாவன,

A - காடர் கட்சிகளை மட்டும் கொண்ட பல கட்சிமுறை

B - பிரதான மூன்று கட்சிகளின் கீழ் குழுக்களைக் கொண்ட பல கட்சிமுறை

C - ஒரு, பல கட்சிமுறை

D - இரு பிரதான கட்சிகளின் ஆதிக்கத்தின் குழுக்களைக் கொண்ட பல கட்சிமுறை

E - ஒரு கட்சியை மட்டும் முக்கியமாகக் கொண்ட பல கட்சிமுறை

(1) ACDE (2) BACD (3) BACE (4) BCDE (5) ABDE

42) மாகாணசபைகளின் ஆளுநர்

A - மாகாணத்தின் நிறைவேற்று அதிகாரங்களைப் பிரயோகித்தல் தொடர்பாகப் பாராளுமன்றுக்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

B - மாகாண முதலமைச்சரினால் நியமிக்கப்படுகிறார்.

C - மாகாணத்தின் நிறைவேற்றத்துடன் அதிகாரங்களைப் பிரயோகித்தல் தொடர்பாக மாகாண சபைக்குப் பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

D - மாகாணசபையின் நிறைவேற்றுக் கிளையின் ஒரு பகுதியாவார்.

E - மாகாண முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில் சனாதிபதியால் நியமிக்கப்படுகிறார்.

(1) ACDE (2) BACD (3) BCDE (4) BACE (5) ABDE

43) இலங்கையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள்

A - மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்படுகின்றன.

B - மாநகரசபைகள், நகரசபைகள், பிரதேசசபைகள் ஆகிய மூன்று வகைகளைக் கொண்டதாகும்.

C - தத்தமது பிரதேசங்களில் சட்டத்தையும் அமைதியையும் பேணும் பொறுப்பினைக் கொண்டவையாகும்.

D - மாவட்டத்தின் மாவட்டச் செயலாளரின் மேற்பார்வைக்கு உட்பட்டதாகும்.

E - தெரிவு செய்யப்படுகின்றதும் நியமிக்கப்படுகின்றதுமான பிரதிநிதிகளைக் கொண்டதாகும்.

(1) ABCE (2) ABDE (3) BCDE (4) ABCD (5) ACDE

44) இலங்கையின் அடிப்படை உரிமைகள் பாதுகாப்புப் பொறிமுறையில் இடம்பெறுபவை

A - குறைகேள் அதிகாரி, உயர் நீதிமன்றம், மனித உரிமை ஆணைக்குழு

B - குறைகேள் அதிகாரி, மனித உரிமை ஆணைக்குழு

C - உயர் நீதிமன்றம், மனித உரிமை ஆணைக்குழு

D - குறைகேள் அதிகாரி, உயர் நீதிமன்றம்

E - மனித உரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதி ஆணைக்குழுவும் அரசசார்பற்ற ஒன்றியமும்

(1) BCDE (2) ABCD (3) ACDE (4) ABDE (5) ABCE

45) 1978ம் ஆண்டு அரசியலமைப்பின் படி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் ஒரு மசோதா சட்டமாவதற்கு அதனை உறுதிப்படுத்த வேண்டியவர்

A - பிரதம மந்திரி

B - சபை முதல்வர்

C - சட்டமா அதிபர்

D - ஜனாதிபதி

E - சபாநாயகர்

(1) ACDE (2) BCDE (3) ABDE (4) ABCD (5) ABCE

46) 1978ம் ஆண்டு யாப்பின் படி ஜனாதிபதிப் பதவி வறிதாகி ஒரு வாரிசாளர் தெரிவு செய்யப்படும் வரையிலான இடைக்காலப் பகுதிக்கு ஜனாதிபதியாகப் பணியாற்றுபவர்

A - சபை முதல்வர்

B - சட்டமா அதிபர்

C - பிரதம மந்திரி

D - பிரதம நீதியரசர்

E - சபாநாயகர்

(1) ABDE (2) ACDE (3) BCDE (4) ABCD (5) ABCE

✶ **ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசியச் சங்கம் என்பவற்றின் மூலக் கொள்கைகள் தொடர்பான சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி 47ம், 48ம் வினாக்களுக்கு விடை தருக.**

A - தற்கால உலகிலுள்ள பரந்த நோக்கங்களைக் கொண்ட அரசசார்பு நிறுவனமாகும்.

B - வரையறுக்கப்பட்ட நோக்கங்களையுடைய பிராந்திய அரசசார்பு நிறுவனமாகும்.

C - சர்வதேச நிறுவனம் தொடர்பாக நடைபெற்ற சன். பிரான்சிஸ்கோ மகாநாட்டில் பங்குபற்றிய 50 நாடுகளின் பிரதிநிதிகளின் அங்கீகாரத்துடன் நிறைவேற்றப்பட்ட சாசனத்தின் அடிப்படையில் 1945 இல் ஸ்தாபிக்கப்பட்டது.

D - சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் நிலைநிறுத்திப் பேணுதல் பிரதான நோக்கமாகும்.

E - டாக்கா பிரகடனத்தின் அடிப்படையில் 1985 டிசம்பர் 08 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது.

F - உறுப்பரசுகளுக்கு மத்தியில் அரசியல், இராணுவப் பரப்புகளில் ஒத்துழைப்பினை விருத்தி செய்தல் பிரதான நோக்கம்.

G - உறுப்பரசுகளின் உள்ளக விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற மூலக் கொள்கையின் அடிப்படையில் செயற்படுகிறது.

H - இருதரப்பு மற்றும் நெருக்கடி விடயங்கள் கலந்துரையாடப்படக் கூடாது என்று உறுப்பரசுகள் பொதுவாக ஏற்றுள்ளன.

I - கம்யூனிச எதிர்ப்பு பிரதான பண்பாகும்.

J - உறுப்பினர்களுக்கிடையிலான உள்ளகப் பிரச்சினைகளினால் அதன் முன்னேற்றம் அதிகளவில் பலவீனமடைந்துள்ளது.

47) ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துக்குப் பொருந்தும் சரியான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவு செய்க.

(1) DBHG (2) HAIJ (3) EFAG (4) BADC (5) CDAG

48) சார்க் (SAARC) அமையத்துக்குப் பொருந்தும் சரியான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவு செய்க.

(1) BEIJ (2) ACFH (3) DEHI (4) BEHJ (5) GHIJ

✶ **பொதுநலவாயம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவை தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி 49ம், 50ம் வினாக்களுக்கு விடை தருக.**

A - ஐக்கிய நாடுகள் அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் செயலாற்றுகின்றன.

B - உறுப்பரசுகளின் சமூக - பொருளாதார அரசியல் அபிவிருத்தியில் கவனம் செலுத்துகிறது.

C - சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் பாதுகாவலனும் மேம்பாட்டாளரும் என்ற வகையில் உலகச் சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

D - போர்க்களங்களில் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் செயற்பாட்டில் பிரதானமாகக் கவனம் செலுத்துகிறது.

E - வரையறுக்கப்பட்ட நோக்கங்களைக் கொண்ட ஒரு நடுத்தர அரசசார்பு நிறுவனம்.

F - இங்கிலாந்தின் முடி தலைமை தாங்குகிறார்.

G - உலகம் பூராவும் தாபிக்கப்பட்டுள்ள தேசிய செஞ்சிலுவைச் சங்கங்கள், செவ்விளம் பிறைச் சங்கங்கள் என்பவற்றினூடாகச் செயற்பாடுகளை மேற்கொள்ளுகிறது.

H - பெரும்பாலும் முன்னாள் பிரித்தானியக் குடியேற்றங்களைக் கொண்டுள்ளது.

I - வரையறுக்கப்பட்ட நோக்கங்களைக் கொண்ட ஓர் அரசசார்பற்ற நிறுவனம்.

J - ஐக்கியநாடுகள் அமைப்பின் உறுப்பு நாடுகளே இதில் அங்கத்துவம் பெறலாம்.

49) பொதுநலவாயத்துக்குப் பொருந்தும் சரியான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவு செய்க.

(1) EFBH (2) EAFH (3) ACDH (4) DEIJ (5) BFHI

50) சர்வதேச செஞ்சிலுவைக் குழுவுக்குப் பொருந்தும் சரியான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவு செய்க.

(1) DCFJ (2) IHAC (3) IDGC (4) DEAB (5) GCHI

The National e-learning Portal for The General Education